www.Padasalai.Net www.TrbTnpsc.com

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை– 600 006.**

ந.க.எண்.59397/டபிள்யு3/இ3/2017, நாள்.19.02.2025

பொருள்: பள்ளிக்கல்வி – கணினி பயிற்றுநர் பணியிடம் – கணினி பயிற்றுநர் நிலை 1 பணியிடமாக தரம் உயர்த்தப்பட்டமை– அரசாணை வெளியிடப்பட்டது – அரசாணையில் திருத்தம் வெளியிடப்பட்டது – தொடர்பாக

பார்வை:
1. அரசாணை நிலை எண்–26 பள்ளிக்கல்வி (பக.7(1)) த்துறை நாள்.12.02.2019.
2. அரசாணை நிலை எண்–23 பள்ளிக்கல்வி (பக.7(1)) த்துறை நாள்.03.02.2025

-----

அரசு /நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் கணினி கல்வித் திட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்த பள்ளி ஒன்றுக்கு ஒரு கணினி பயிற்றுநர் (Computer Instructor) பணியிடம் தோற்றுவிக்க அரசு முடிவெடுத்து அதன் படி மேல்நிலைப் பிரிவுகளுக்கான கணினி ஆசிரியர்களது கல்வித் தகுதியினை NCTE Regulations 2014 ன்படி நிர்ணயித்து 814 கணினி பயிற்றுநர் நிலை–2 காலிப்பணியிடங்களை நிலை உயர்த்தியும் கணினி பயிற்றுநர் நிலை–2 பணியிடத்தில் பணியாற்றுபவர்களில் முதுகலை கணினி ஆசிரியர் கல்வித்தகுதி பெற்றவர்களை கணினி பயிற்றுநர் நிலை–1 பணியிடங்களாக தரம் உயர்த்தவும் அனுமதி அளித்து பார்வை 1–இல் காண் ஆணை வெளியிடப்பட்டது.

ஆனால் அரசாணையின் 2ம் பக்கம் பத்தி 2.(v)-ல் promoted என்ற வார்த்தை இடம் பெற்றுள்ளதால் இவ்வரசாணையின்படி Computer Instructor Grade –II பணியிடத்தை re-designated செய்யப்பட்டு Computer Instructor Grade –I என பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது எனக் கருதி FR 22(B) அடிப்படையில் பதவி உயர்வுக்கான 3% ஊதிய நிர்ணயம் தலைமை ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டமைக்கு தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்டதையடுத்து சார்ந்த கணினி ஆசிரியர்களால் நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டு W.P.No.27205 etc., Batch cases–இல் 08.03.2024–இல் தீர்ப்பாணை பெறப்பட்டது.

இந்நிலையில் அரசாணை நிலை எண்26 பள்ளிக்கல்வி (பக.7(1)) த்துறை நாள்.12.02.2019–ல் Promotion என்று குறிப்பிட்டதை Upgradation என திருத்தம் செய்து பார்வை 2–இல் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

கணினி பயிற்றுநர் நிலை-2 ஆசிரியர்கள் உரிய கல்வித்தகுதியின் அடிப்படையில் கணினி பயிற்றுநர் நிலை-1 ஆக தரம் உயர்த்தப்படுகிறார்கள் (Upgraded) என அரசாணைக்கு திருத்தம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

தரம் உயர்த்தப்படும் முன்னரும் தரம் உயர்த்தப்பட்ட பிறகும் கணினி பயிற்றுநர்கள் ஒரே பணியினை (மேல்நிலை வகுப்புகள்) மேற்கொள்வதால் அடிப்படைவிதி 23ன் படி மட்டுமே ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்பதால் கணினி பயிற்றுநர் நிலை-2 (Pay Level-16, 36400-115700) இல் இருந்து கணினி பயிற்றுநர் நிலை-1 ஆக Pay level-18, 36900-116600 என்ற ஊதிய கட்டுநிலையில் கணினி பயிற்றுநர் நிலை -1 ஆக தரம் உயர்த்தி ஆணை வழங்கப்பட்ட நாளில் அடிப்படைவிதி 23ன் படி ஊதிய நிர்ணயம் செய்திட அனைத்து முதன்மைக்கல்வி அலுவலருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

"**FR.23**.- The holder of the post, the scale of pay of which is changed, shall be treated as if he was transferred to a new post on the new scale of pay. If the revision of the scale of pay is without any increase in duties and responsibilities, pay shall be fixed with effect from the date of revision of scale of pay at the same stage, if there is a stage in the revised scale equal to the pay drawn in the old scale of pay and if there is no such stage, pay shall be fixed at the next higher stage. In both these cases, the next increment in the new scale shall accure on the normal date, namely the date on which the next increment is due in the old scale of pay."

பார்வை 2-இல் காண் அரசாணை நகல் தக்க நடவடிக்கைக்காக அனைத்து முதன்மைக்கல்வி அலுவலருக்கும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு:- அரசாணை நிலை எண்-23
பள்ளிக்கல்வி (பக.7(1)) த்துறை
நாள்.03.02.2025

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்.

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

www.Padasalai.Net

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com